## 1.கோவை மாநகராட்சிக்கு 24 மணிநேர குடிநீர் திட்டம் தேவையா?

கோவை மாநகரில் குடிநீர் பகிர்மான குழாய்கள் 30 முதல் 60 ஆண்டுகளுக்கு முன் பதிக்கப்பட்டவை இந்த குழாய்களில் ஏற்படும் கசிவுகளால் குடிநீர் விநியோகம் இல்லாத நேரத்தில் அசுத்தமான நீர் குழாய்குள் சென்று குடிநீர் தரத்தை பாதிக்கிறது. இதனை தடுக்க குழாயினுள் 24 மணி நேரமும் அழுத்தத்துடன் நீர் இருப்பது அவசியம் பொது மக்களுக்கு சுத்தமான பாதுகாப்பான குடிநீர் போதுமான அளவு அவர்களுக்கு தேவைப்படும் நேரத்தில் கிடைப்பது 24 மணிநேர குடிநீர் விநியோகத்தினால் மட்டுமே சாத்தியம்.

## 2. கோவை மாநகர் குடிநீர் விநியோகம் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டதா?

கோவை மாநகரில் குடிநீர் விநியோகம் கோவை மாநகராட்சியின் முழு பொறுப்பிலும் கட்டுப்பாட்டிலும் தொடரும். குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் கோவை மாநகராட்சி அதிகாரிகளின் நேரடி கண்காணிப்பில் ஒப்பந்ததாரர் மூலம் செய்யப்பட்டு அவருடைய சேவைக்குரிய தொகை வழங்கப்படும். இது ஏற்கனவே வார்டு அளவில் நடைமுறையில் இருந்தது . தற்போது இந்த பணி மாநகர் முழுவதுக்கும் தகுதியான திறமையான நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

## 3. சூயஸ் என்ற பன்னாட்டு நிறுவனத்திற்கு ஏன் பணி வழங்கப்பட்டது? சூயஸ் நிறுவனம் பொலிவியா போன்ற சில நாடுகளில் விரட்டி அடிக்கப்பட்டுள்ளது தெரியுமா?

பொலிவியா போன்ற மற்ற நாடுகளில் ஒப்பந்ததாரர் திட்டத்திற்கான செலவினை தானே முதலீடு செய்து தன் முதலீட்டினையும் தன்னுடைய லாபத்தினையும் பயனாளிகள் கட்டணம் மூலம் பெரும் வகையில் வடிவமைக்கப்பட்டு இருக்கலாம். ஆனால் கோவை 24 மணிநேர குடிநீர் திட்டத்தினை பொறுத்தவரையில் திட்டத்திற்கான முதலீடு இந்திய மற்றும் மாநில அரசுகள் மற்றும் மாநகராட்சியால் செய்யப்படுகின்றன. ஒப்பந்ததாரர்க்கு ஒப்பந்த விதிகளின் படி செய்த பணிகளுக்கான தொகை மாநகராட்சியால் வழங்கப்படும். குடிநீர் கட்டணம் கோவை மாநகராட்சியால் தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி நிர்ணயிக்கபடும்.

கோவை 24 மணிநேர குடிநீர் திட்டப் பகுதியில் சுமார் 1,50,000 குடிநீர் இணைப்புகள் உள்ளன. அதனால் ஒப்பந்த அழைப்பில் பங்கேற்க 50,000 குடிநீர் இணைப்புகளில் குறைந்தது ஒரு வருடம் குடிநீர் விநியோகம் இயக்கி பராமரித்தல் முன் அனுபவ தகுதியாக நிர்ணயிக்கப்பட்டது. அத்தகைய அனுபவம் இந்தியாவில் உள்ள எந்த ஒரு நிறுவனத்திற்கும் இல்லாத காரணத்தால் பன்னாட்டு நிறுவனங்கள் ஒப்பந்த அழைப்பில் பங்கேற்றன. இந்த ஒப்பந்த அழைப்பில் குறைந்த தொகை கேட்ட சூயஸ் என்ற நிறுவனத்திற்கு மதிப்பீட்டை விட சுமார் 14.15% குறைந்த தொகையினில் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 4. ஒப்பந்தகாலம் ஏன் 26 ஆண்டுகள் என்ற நீண்ட காலத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்டது?

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் உள்ள பல நகரங்களில் சோதனை அடிப்படையில் 24 மணிநேர குடிநீர் திட்டம் 2008 முதல் இந்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதில் பல நகரங்களில் ஒப்பந்ததாரரின் பராமரிப்பு காலம் முடிந்த பிறகு உள்ளாட்சி நிறுவனங்களால் 24 மணி நேரம் தொடர்ந்து குடிநீர் விநியோகிக்க முடியாமல் ஒரு நாளுக்கு சில மணிநேரம் குடிநீர் விநியோகம் நடைபெறும் நிலை உள்ளது.

24 மணிநேர குடிநீர் திட்டம் என்பதில் வடிவமைப்பதிலும் இயக்குதல் மற்றும் பராமரிப்பதிலும் கணினி கண்காணிப்பு போன்ற நவீன தொழில் நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன. நீண்ட காலமாக சில நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் என்ற முறைக்கு பழகிவிட்ட பொதுமக்களும் மாநகராட்சி பராமரிப்பு பணியாளர்களும் 24 மணிநேர குடிநீர் விநியோக தேவையினை உணரவும் பயன்படுத்த பழகவும் சற்று அதிக காலம் தேவைப்படுகிறது.

அதனால்
வடிவமைப்பு 1 வருடம்,
கட்டுமானம் 4 வருடங்கள்,
இயக்குதல் மற்றும் பராமரித்தல் - 21 வருடங்கள்
என்று நிர்ணயிக்கப்பட்டது

## 5. 24 மணிநேர குடிநீர் விநியோகத்திற்கு தேவையான குடிநீர் ஆதாரம் உள்ளதா?

தற்பொழுது கோவை மாநகராட்சிக்கு சிறுவாணி, பில்லூர், பவானி மற்றும் ஆழியாறு ஆகிய நீராதாரங்கள் மூலமாக சுமார் 225 மில்லியன் லிட்டர் குடிநீர் கிடைத்து வருகிறது. மத்திய அரசின் வழிகாட்டுதல்படி ஒரு நபருக்கு நாளொன்றுக்கு தேவை 135 லிட்டர் என்ற கணக்கின்படி கோவை மாநகராட்சிக்கு போதுமான நீராதாரம் உள்ளது. மேலும் திட்டக்காலமான 2044-ல் எதிர்பார்க்கப்படும் மக்கள் தொகைக்கு தேவையான கூடுதல் குடிநீர் சுமார் 318 மில்லியன் லிட்டர் நீர் பெறுவதற்கான பில்லூர் 3வது குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகதுவங்கி நடைபெற்று வருகிறது. இந்தப் பணி 24 மணிநேர குடிநீர் விநியோகம் துவங்க திட்டமிட்டுள்ள 2023 குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 6. சூயஸ் நிறுவனத்தின் கடமைகளும் பொறுப்புகளும் என்ன? சிறுவாணி, பில்லூர் நீராதாரங்கள் யார் பொறுப்பில் இருக்கும்? பொது மக்கள் ஆழ்துளை குழாய் கிணறு, மழைநீர் சேகரிப்பு போன்றவற்றை செயல்படுத்த ஏதாவது தடை உள்ளதா?

சூயஸ் நிறுவனத்தின் பொறுப்பு, பில்லூர் மற்றும் சிறுவாணி நீராதாரங்களிலிருந்து மாநகராட்சி எல்லைக்குள் உள்ள பிரதான நீர் தேக்க தொட்டிகள் மூலம் பெறப்படும் குடிநீரினை திட்டப்பகுதியிலுள்ள குடிநீர் இணைப்புகளுக்கு கொண்டு சேர்ப்பதும், வழங்கப்பட்ட குடிநீருக்கான மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை மாநகராட்சி சார்பாக வசூலித்து மாநகராட்சியின் கணக்கில் செலுத்துவதும் மட்டுமே. பில்லூர் சிறுவாணி நீர் ஆதாரங்களில் இருந்து பிரதான குடிநீர் தேக்க தொட்டிகளுக்கு சுத்தமான, பாதுகாப்பான குடிநீரினை கொண்டு வந்து சேர்க்கும் பொறுப்பு ஏற்கனவே உள்ளவாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் கோவை மாநகராட்சியிடமே தொடரும்.

கோவை மாநகராட்சி பகுதிகளில் உள்ள பொது குழாய்கள் இரண்டு வகைப்படும். அவற்றில், 1.ஆழ்துளை கிணற்று நீர் விநியோகம் இவை கோவை மாநகராட்சியிடமே தொடரும். 2. பில்லூர் மற்றும் சிறுவாணி குடிநீர் பொதுக்குழாய்கள் அவற்றிற்கான தேவை இருக்கும் வரை தொடரும். அக்குழாய்களுக்கு குடிநீர் மானிகள் பொருத்தப்பட்டு பயன்படுத்தப்படும் குடிநீரின் அளவு மாநகராட்சியால் கணக்கிடப்படும்.
பொது மக்கள் ஆழ்துளை கிணறு அமைப்பதற்கும் மழைநீர் சேமிப்பதற்கும் இந்த திட்டத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

## 7. இத்திட்டத்தின் தற்போதைய நிலை என்ன? இத்திட்டம் எப்போது முழு பயன்பாட்டிற்கு வரும்?

08.01.2018-ல் துவக்கப்பட்ட இப்பணியில் ஆய்வு மற்றும் வடிவமைப்பு பணிகள் முடிவுற்று 03.08.2019 முதல் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 2023 ஆகஸ்ட் மாதத்தில் மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது

## 8. புதிய குடிநீர் இணைப்புகள் யாரால் வழங்கப்படும்?

புதிய குடிநீர் இணைப்புகளுக்கு ஒப்புதல் ஏற்கனவே உள்ள குடிநீர் விநியோக துணை விதிகளின்படி மாநகராட்சியே தொடர்ந்து செயல்படுத்தும். அதேபோல் குடிநீர் இணைப்பு வகை மாற்றம், இணைப்பு துண்டிப்பு ஆகிய அனைத்து செயல்பாடுகளும் மாநகராட்சி வசமே தொடரும். மாநகராட்சியால் ஒப்புதல் அளிக்கப்பட்ட குடிநீர் இணைப்புகள் மாநகராட்சி சார்பாக சூயஸ் நிறுவனத்தால் ஏற்படுத்தப்படும்.

## 9. பொருளாதார நிலையில் பின்தங்கிய மக்களுக்கு இத்திட்டத்தினால் என்ன பயன்?

தற்பொழுது சில நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் நடைபெறும் நிலையில் வசதியுள்ளவர்கள் பெரிய கீழ்நிலைத் தொட்டி, நீருந்தி, மேல்நிலை நீர்தொட்டிகள் பயன்படுத்தி அனைத்து நாட்களிலும் தடையின்றி குடிநீர் உபயோகிக்கின்றனர். அவ்விதமான வசதிகளற்ற ஏழை எளியோர் நீண்ட நாட்களுக்கு நீரை சேமித்து வைக்க தேவையான குடம், பாத்திரம் ஆகியவை இல்லாததால் குடிநீருக்காக தெரு தெருவாக அலைய வேண்டி உள்ளது. தற்பொழுது புதிய குடிநீர் இணைப்புக்கு மாநகராட்சிக்கு ஒரு வைப்புத் தொகை செலுத்துவதுடன், தங்கள் சொந்த செலவில் குடிநீர் இணைப்புக் குழாய்களையும், மானிகளையும் அமைத்துக்கொள்ளும் நிலை உள்ளது. ஆனால் 24 மணிநேர குடிநீர் திட்டத்தின் கீழ் புதிய குடிநீர் இணைப்புக்கு வைப்பு தொகை செலுத்தி மாநகராட்சி ஒப்புதல் பெற்ற பிறகு மாநகராட்சியின் செலவிலேயே குடிநீர் இணைப்பு மற்றும் குடிநீர் மானிகள் பொருத்தப்படும்.

## 11. இத்திட்டம் ஏன் தனியார் பங்களிப்புடன் கூடிய திட்டம் என்று அழைக்கப்படுகிறது?

இந்த திட்டம் நவீன தொழில்நுட்பங்களுடன் திட்டப்பகுதி முழுவதும் கணினிமூலம் கண்காணிக்கப்படும் வகையில் அமைக்கப்பட்ட உள்ளது. இத்திட்டத்தின் பராமரிப்பு காலம் முழுவதும் ஒப்பந்ததாரர் இப்பணியினை செயல்படுத்துவதை உறுதிப்படுத்தும் பொருட்டு கட்டுமானப்பணி நடைபெறும்போது மொத்த கட்டுமான செலவில் 80% மட்டும் சூயஸ் நிறுவனத்திற்கு வழங்கப்படும்.

மீதமுள்ள 20% அடுத்துவரும் 21 ஆண்டு கால இயக்குதல் மற்றும் பராமரிப்பு காலத்தில் ஒப்பந்த விதிமுறைகளின்படி படிப்படியாக வழங்கப்படும். கட்டுமான காலத்தில் 20% தொகை ஒப்பந்ததாரரால் முதலீடு செய்யப்படுவதால் இத்திட்டம் தனியார் பங்களிப்புடைய திட்டம் என்று அழைக்கப்படுகிறது.

Coimbatore 24 x 7 Water Supply

வாடிக்கையாளர்கள் சேவை எண்கள்

வாட்ஸ் ஆப்

**98650 60708**

தொலைபேசி

**0422 6610000**

24 X 7 குடிநீர் திட்டப்பகுதி வார்டுகள்

| | |
|---|---|
| வார்டு 10-15 | வார்டு 20-25 |
| வார்டு 37-41 | வார்டு 44-86 |

# கோவை மாநகராட்சியின் 24X7 குடிநீர் திட்டம்



# பொதுவான கேள்வி பதில்கள்